# Newbec

25 & 26 நவம்பர் 2023

NEW WAY OF BEING CHURCH ஆண்டின் பொதுக்காலம் 34 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
திருஅவையும் இளைஞர்களும்

மாதாந்திர நிகழ்வு:
இளையோர் தினம்




# கோத்தா கினபாலு உயர்மறைமாவட்டம்

## ஆயர் மாமன்ற முன்தயாரிப்பு அறிக்கை

### தீர்மானம்

**பரிசுத்த ஆவியானவர் நமக்கு என்ன சொல்கிறார்?**

தற்போதைய புதுப்பிப்புகளுடன் தற்போதைய சிக்கல்கள் மற்றும் பல்வேறு சமூக பிரச்சனைகளை கட்டுப்படுத்த, புதுப்பித்தல் திட்டங்கள், உருவாக்கங்கள் மற்றும் பல்வேறு நிலைகளில் பயிற்சி தேவை,

1. **விழிப்புணர்வு** - அனைவரும், தங்களது திருஅவை வளர்ச்சி மற்றும் மறைபரப்பு பணிகளில் தீவிரமாக பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள்.

2. **சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள்** - தொழில்நுட்பம், இஸ்லாமியமயமாக்கல், மதச்சார்பின்மை, அக்கறையின்மை ஆகியவை நம்மை பாதித்துள்ளன. இதை சமாளிக்கவும் கட்டுப்படுத்தவும் ஆக்கப்பூர்வமான வழிகள் தேவை. விழிப்புணர்வை உருவாக்க Laudato Si (இயற்கையை பேணுவோம்) என்ற கருத்துடன் இந்த சிக்கல்களில் நடவடிக்கை எடுக்க அதிக கவனம் செலுத்துவோம். எ.கா. கடற்கரை மற்றும் நதியை சுத்தம் செய்வது.

3. **தலைமைத்துவம்** - பல்வேறு நிலைகளில் திருஅவையின் வீழ்ச்சிக்கு காரணம் தலைமைத்துவத்தின் அக்கறையின்மை. தலைமைத்துவ பாணிகள் பங்கு அருள்பணியாளர்கள் மற்றும் திருஅவை குழுக்களிடையே தீவிரமாக பரிசீலிக்கப்பட வேண்டும். வயதை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அதற்கு அப்பால் செல்ல வேண்டிய அவசியம். சிறந்த தலைமைத்துவத்திற்கு உருவாக்க பயிற்சி தேவை.

4. **நம்பிக்கை உருவாக்க பயிற்சி** - விவிலிய அறிவு பெற தாகம். பொதுநிலையினர் பல்வேறு நிலைகளிலும் திறன்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு திருவிவிலியம், திருஅவை போதனைகள் போன்றவற்றைப் பற்றி பயிற்சியளிக்கப்பட வேண்டும். உருவாக்கித் தெரிவிக்க வேண்டும். இது அவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மறைபரப்பு மற்றும் பணிக்குழுக்களில் இணைந்து பணி செய்வதற்கான திறன்களை மேம்படுத்தும்.

5. **சீடத்துவம்** - பொதுநிலையினர் எல்லை நிலைகளிலும் தலைவர்களைச் சார்ந்தே இருக்கிறார்கள். அவர்களுக்கு தேவையான வல்லமை அளித்து அவர்கள் தைரியமாக பணிசெய்ய சரியான உருவாக்க பயிற்சிகள் தேவை. சிறப்பு பணிக்குழுக்களில் இருப்பவர்களுக்கு முறையான உருவாக்கப் பயிற்சி மற்றும் நியமணம் செய்வது அவசியம்.

6. **வெளியுலக தொடர்பு** - ஒதுக்கப்பட்டவர்கள், ஏழை, ஒற்றைப் பெற்றோர், புதிதாகத் திருமணம் ஆனவர்கள், LGBTQ, கடினமான திருமணச் சூழ்நிலைகள் உள்ளவர்களை கண்டு தேவையான உருவாக்கப் பயிற்சி தேவை.

7. **இளைஞர்கள்** - தங்களுக்கு திருஅவையில் பல வாய்ப்புகள் / நடவடிக்கைகள் இருந்தாலும் புறக்கணிக்கப்பட்டதாக உணர்கிறார்கள். அவர்களைக் கவரும் வகையில் உருவாக்கப் பயிற்சிகள், உற்சாகமான மற்றும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தேவை. அவர்கள் பணிக்குழுக்களில் ஈடுபட வேண்டும். அவர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதில் பெற்றோரின் பங்கு முக்கியமானது.




# சி மறைமாவட்டம்

## ஆயர் மாமன்ற முன்தயாரிப்பு அறிக்கை

**தீர்மானம் கீழ்க்கண்ட கருத்துகள் முன்மொழியப்பட்டுள்ளன.**

A. **இடைவெளியைக் குறைத்தல் (ஒத்துழைப்பை வளர்ப்பது)** - அனைவரையும் உள்ளடக்கியதன் மூலம். அருள்பணியாளர்களுக்கும் பொது நிலையினருக்கும் இடையே நல்ல உறவையும் நம்பிக்கையையும் உருவாக்குதல். அனைவருக்கும் இடையே தொடர்பு, திட்டமிட்ட ஆலோசனை, மற்றும் கருத்துக் கேட்டல் மற்றும் இணைந்து முடிவெடுப்பது.

B. **சமூகங்களை உருவாக்குதல் (பங்கேற்பதை ஊக்குவித்தல்)** - அதிசக்களில், சமூகத்தை கட்டியெழுப்ப ஒருவருக்கொருவர் நமது திறமைகளைப் பயன்படுத்துவதன் மூலம், தேவையில் இருப்பவர்களை கவனித்துக்கொள்ளவும், ஒன்றாக இறைவேண்டல் மற்றும் வழிபடுதல், கற்றல், ஒன்றாக வேலை செய்தல், சிறிய சமூகங்களுக்கிடையில் சரியான தொடர்பு மற்றும் ஆலோசனையின் மூலம் உருவாக்கலாம்.

C. **தேவையில் இருப்பவர்களை சந்தித்து (பணியை ஊக்குவிப்பது)** - விளிம்பு நிலை மற்றும் ஏழைகளுக்கு தேவையானதை பெற்றுத்தருவது.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன: பரிசுத்த ஆவியானவரின் தலைமையில், நாங்கள் கடவுளின் மக்களாக தொடர்ந்து ஒன்றாக நடக்க தீர்மானித்தோம்:

1) **ஒத்துழைப்பை வளர்ப்பது** ஆயர், அருள்பணியாளர்கள், துறவற சபையினர், பொது நிலையினரிடையே ஒரு பொதுவான கருத்துடன், வழக்கமான ஆலோசனை மற்றும் செவிசாய்த்தல் அமர்வுகள் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை நோக்கி திருஅவையின் பிரச்சினைகளில் தொடர்பு, உரையாடல் மற்றும் முடிவெடுப்பதை மேம்படுத்துதல்.

2) **பங்கேற்பை ஊக்குவித்தல்** நம்பிக்கையின் பகிர்வு மற்றும் உருவாக்கத்தை மையமாகக் கொண்டு, திருஅவை நடவடிக்கைகளின் மூலம் சிறிய விசுவாச சமூகங்களில் விசுவாசிகளின், கூட்டுறவு, இளைஞர்கள், முதியவர்கள், ஏழைகள் மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ளவர்களுக்கு வழிகாட்டுதல். சுற்றுச்சூழல், இனம், கலாச்சாரம் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரும் முழுமையாக ஆதரிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, ஒன்றிணைந்து, அவர்களின் கொடைகளையும் திறமைகளையும் பகிர்ந்து கொள்ள இயலும். எந்த சூழ்நிலையிலும் ஒருதலைப்பட்சமாக இராமல் திருஅவையின் சமூக சேவையில் ஈடுபட அதிகாரம் அளிக்கப்படுகிறது.

3) மற்றவர்களை கிறிஸ்துவிடம் கொண்டு சேர்ப்பதில் ஒரே திருஅவையாக இணைந்து **பணியை ஊக்குவித்தல்**. நமது வழிபாட்டு முறைகளில் வெளிப்படுத்தப்படும் ஒருமை மற்றும் நமது வெவ்வேறு சமூகங்களில் காணப்படும் உள்ளடக்கத்தின் மூலம் இது செயல்படுத்தலாம். ✣

செய்தி ஆதாரம்:
11 ஜூலை 2022 அன்று பினாங்கில் நடைபெற்ற மலேசியா ஆயர் மாமன்ற முன்தயாரிப்பு குழு அறிக்கை

திருத்தம்:
மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
directorapikl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 48/2023